31.03.2022 Probate OP.No.9/2017

P.W.3 – திரிபுரானந்தன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர் குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஆறுமுகம் என்னுடைய நண்பர் சுந்தரேசனின் மச்சான். என் நண்பன் சுந்தரேசன் உடல்நிலை சரியில்லாமல் இறந்து போனாரா என்றால் அவருக்கு கை நடுக்கம் ஏற்பட்டு, பின்னர் இறந்துவிட்டார். நடமாடக்கூடிய நிலைமையில் இல்லையா என்றால் ஒரு நபரை பிடித்துக்கொண்டு நடப்பார். பேசக்கூடிய நிலையில் தான் இருந்தார். அவர் சத்துவாச்சாரி உறவுசிங் போர்டில் குடியிருந்தார். வீட்டு எண் தெரியாது. அவர் ஆவணம் எழுதியதாக சொல்லும் சமயத்தில் சத்துவாச்சாரி உறவுசிங் போர்டு வீட்டில் தான் இருந்தார். அதனுடைய வீட்டு எண், தெரு சொல்ல இயலாது. அவருடன் அவருடைய மச்சான் ஆறுமுகம் இருந்தார். எப்போதும் அவருடன் தான் இருப்பார். ஆவணம் எழுதும்போது ஆறுமுகம் இருந்தாரா என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை, நீண்ட நாட்கள் ஆனதால் ஞாபகம் இல்லை. பத்திர தாள்கள் வாங்கவில்லை. பத்திர எழுத இருசன் என்ற பத்திரம் எழுதுபவர் வந்தார். பத்திர எழுத்தரை யார் கூட்டி வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. ஆவணம் டைப் செய்யப்பட்டது. எங்கு டைப் செய்யப்பட்டது என்பது எனக்கு தெரியாது. எழுதப்பட்டதாக சொல்லும் ஆவணத்தில் அந்த ஆவணம் எங்கு டைப் செய்யப்ட்டது என்று எழுதியிருக்கிறதா என்றால் தெரியாது. எத்தனை பக்கங்கள் டைப் செய்யப்பட்டது என்றால் 3 பக்கங்கள் டைப் செய்யப்பட்டது. டைப் செய்யும் இடத்திற்கு சென்று சுந்தரேசன் வாசகங்களை சொல்லவில்லை. டைப் செய்த ஆவணத்தில் சுந்தரேசன் கைநாட்டு வைத்தார், பின்னர் நான் கையெழுத்து செய்தேன். ஆவணம் படித்துக்

காண்பிக்கப்பட்டது. நானும், ஆறுமுகமும் நெருங்கிய உறவினர் என்றால் சரியல்ல. படுத்த படுக்கையாகவும், சுயநினைவு இல்லாமலும் இருந்த சுந்தரேசனிடம் ஆறுமுகம் கைநாட்டு வாங்கி ஆவணம் தயார் செய்தார் என்றாலும், அதற்கு நானும் துணையாக இருந்தேன் என்றாலும் சரியல்ல. இந்த ஆவணத்தில் சர்வே நெம்பர் எழுதப்பட்டுள்ளதா என்றால் தெரியாது. பேங்கில் உள்ள பணத்தை பற்றி சொல்லி இருந்தார்கள், ஆனால் எந்த பேங்க் என்று தெரியாது. சுந்தரேசனுக்கு இரண்டு மச்சான்கள். இன்னொரு மச்சான் பெயர் என்ன என்றால் ஞாபகம் இல்லை. பிரபாகரன் என்பவரை தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. நான் ஒரு பொய்யாக ஆவணத்தில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளதால் தான் என்னால் உண்மையை சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொன்ன வாக்குமூலம் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல. நான் ஆறுமுகத்துடன் கூட்டு சேர்ந்துக்கொண்டு பொய்யான ஆவணத்தில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளதால் என்னுடைய சாட்சி ஏற்றுக்கொள்ள கூடியது அல்ல என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சுந்தரேசன் எந்தவித உயில் ஆவணமும் எழுதவில்லை என்றால் சரியல்ல. சுந்தரேசன் கையெழுத்து போடுவார்.

மறுவிசாரணை இல்லை.